உ

Parameshwara College.
Jaffna. 29 - 4 - 24.

V. S. Raja Aiyangar.
Lecturer in Tamil:
Mahamahopadyaya V. Swaminathaiyar
Thyagaraja Vilas
Tiruvetteeswaranpet.
Madras.

'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ! பெருமா!! நுங்கட்கு வணக்கம். ஆலவாயினவிர் சடைக் கடவுள் நுங்கட்கு எல்லா நலங்களையும் நல்குவாராக. எமது தெய்வத் திருத்தமிழ் நூலைப் பலகாலும், ஆராய்ந்து படித்தலிலே நுழைந்திருந்தமையானே நுங்கட்கு அவ்வக்காலங்களிலே அன்புரைகள் எழுத இயலாதிருந்தேம். அது பற்றி வருந்தற்க. அக்காலத்தை யாம் இன்று நினைந்த போது "மற்றது தான்" அற்றுரைத் தாங்கிய வைவே சதியணி வரை மேல் முற்று முகிழ் முலை" சென்றமையை எமக்கு நினைவிற் புகுந்தது.

இனி இப்போது யாம், தமிழ் சிறிது உணர்த்தி வரும் எமது 'பரமேசுவரப் பெருங்கல்லூரிக் கழகத்திலே கணித நூல், இரசாயன நூல், பௌதிகம் முதலாயன பாறும் உணர்த்தி வருபவர்களும் வாய்ந்த மனமும் தூய ஒழுக்கமும் தமிழ் மொழிக்கண் ஆர்வமும் நிரம்பியவர்களுமான திருவாளர் பாலசுந்தரர் அவர்கள் ஒருவர் இருக்கின்றார்கள். அவர்கள் ஆண்டில் இளையர்களாயினும் அறிவானும் அன்பானும் முதிர்ந்தவர்கள் என்பதை யாம் அறிவேம். இவர்கள் லண்டன் நகரத்துப் பல்கலைக் கழகத்துப் பௌதிக நூல் வல்லுநர் என்னும் (பி.எஸ்.ஸி) பட்டம் பெற்றவர்கள். அவர்கள் செந்தமிழ் மொழிக்கண் வைத்த பேரன்பு நினைந்து இளையரேயாயினும் பயன் நெறி முறையானதை யாம் மனையத்துணையாகக் கொண்டு, அவர்கள் அம்மொழியினைக் கற்க முந்துறுதலுங் கண்டு இறும்பூதடைகின்றேம்.

இனி அவர்கள் இடையிடையே தமக்குக் கிடைத்த ஓழிவு நேரங்களில் தமிழ் மொழியினை

யும் அதனை இகழ்வோன்று ஆதரிப்பாரையும் அவர் நோக்கங்களையும் மாறவற்றையும் பலகாலும் எம்மோடு மெய்யன்பு ததும்பப் பேசியதுண்டு. அவர்கள் உள்ளம் உவக்கும்படி நாங்கள் செய்து வரும் தமிழ்த் தொண்டைப் பலபட விரித்துரைத்தேம். அவற்றுள்ளும் சிந்தாமணியின் மூன்றாம் பதிப்பை அவர்களுக்கு மாதிரிக் காட்டினேம். அவர்கள் அதனை மிக வியந்து பாராட்டுகின்றார்கள். அன்றி அப்பதிப்பின் நூல் ஒன்றை வரவழைத்துத் தரல் வேண்டுமெனவும் வற்புறுத்திக் கூறினார்கள். ஆதலால் அவர்கள் பெயருக்குச் சிந்தாமணி மூன்றாம் பதிப்பின் ஒரு நூலும் மாதவம் பத்திரம் ஒன்றும் சேர்த்து V.P. இல் அனுப்புவீர்கள். அதனை அவர்கள் அன்போடு பெற்றுப் படிப்பதோடு மன்றி யாம் நன்றியினையுடையோமாதலின் ஒரு அன்புரை மூலம் தெரிவிக்கும்படி செய்து வைக்கின்றோம். அவர்கள் விலாசத்தைப் பின்னே தருகின்றோம். அவர்கள் விலாசம் வருமாறு.

M. Balasundaram. B.Sc. Hon.
Lecturer in Mathematics.
Parameshwara College
Jaffna.

இனி அவர்களும் யாமுமாகக் கலித்தொகைப் பிரதிகளில் இரண்டு நூல்களை வரவழைத்துக் கொள்வேம். அனந்தராமையரவர்கள் அப்பதிப்பினை யாண்டு முற்றுவிப்பார்களோ அறியேம். தயை கூர்ந்து அதனையும் தெரியத் தருவீர்கள். மற்று, முன்னொருகால் யாம் சிந்தாமணிப் பிரதி ஒன்று வரவழைத்த போது நீங்கள் அன்பால் பயனைச் சிறு கழிவும் செய்து அனுப்பினீர்கள். அதனை யாம் மறக்கற்பாலமல்லேம். இனித் திரு. பாலசுந்தரம் B.Sc அவர்கள் தமிழ் மொழிக்கண் வைத்த அன்பின் பரிசிலாகவும் அவர்களுக்கு இனித் தமிழில் ஊக்கம் பிறப்பதற்காம் தமிழ்த் தொண்டாகவும் நினைந்து, அவர்களுக்கும் எமக்குப் போலச் சிறு கழிவு செய்து V.P. வாயிலாய் அனுப்பும்படி நுங்களை வேண்டுகின்றேம். இவ்வன்புரையைப்

பழுத்து விட்டதும் அப் பெருமானுக்கு நுங்
கள் கையால் அரு ஒரு அன்புரை வாயிலாய்
நுங்கள் திருவுள்ளத்து ஒழுகி வழியும் அ
றிவாம் தேனைத் துளிகள் இலவற்றைத் தீந்தமிழ்
என்னும் பொற வள்ளத்துட் பெய்து அவர்கள்
உள்ளத்தில் நுங்கள் திருவுருவத்தைப் பொறித்
தருளுங்கள்.

தமிழ் மொழி பொருட்டுப் பயன் நோக்கா
து, உடல் பொருளாவி மூன்றினையும் தியாகஞ்
செய்த நுங்கள் தவ உடலைக் ஒங்கத்தி
வேனா வழுத்தும் அன்புள்ள

இராஜ ஐயனார்.

35

29. 10. 24

Pg. 42, 43, 44

3176

[illegible] [illegible]
29. 10. 24.

P. 42-47.
த.க. VOL Q

(23)